**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06–ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படிதிரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர் இல்லை. 1ம்பிரதிவாதி ஆஜர்.2ம் பிரதிவாதி ஆஜர் இல்லை. வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

அ.வ.எண்.488/2020

பி.வா.சா.1 மைனாவதி க/பெ பரமசிவம்

**வாதி தரப்பில்குறுக்குவிசாரணை :–**

1. எனக்கு எழுத, படிக்க தெரியுமா என்றால் ஓரளவுக்கு தெரியும். நான் 4வது வகுப்பு படித்துள்ளேன். ரி.ச.எண்.510/4எ மற்றும் ரி.ச.எண்.510/2பி காலையில் உள்ள தாவா சொத்துக்கள் பூர்விக சொத்துக்காள என்றால் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்கள் என் தந்தை சண்முகத்திற்க்கு அ.வ.எண்.541/2003 ஈரோடு சார்பு நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட சமரச தீர்ப்பாணை படி பாத்தியப்பட்டதா என்றால் சரிதான்.

2. 27.03.2014 தேதியில் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தை நான், எனது தந்தை சண்முகம் மற்றும் திலகவதி ஆகியோர் ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை என் அப்பா சண்முகத்திற்க்கும், திலகவதிக்கும் தாவா சொத்து கூட்டாகவும் எனக்கு இதர சொத்துக்கள் தனியாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

3. மேற்படி பாகப்பத்திரம் எழுதிய தேதியில் வாதி என்னுடைய தந்தை சண்முகத்திடமும், திலகவதியிடமும் தாவா சொத்தை கிரையம் பெற்றார் என்றால் சரிதான். இந்த வழக்கில் என் உறவினரான 2ம் பிரதிவாதி என்னுடைய சொத்தில்தான் விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரிதான்.

வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.